199. [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 110-இல் அறிக்கை வெளியிடுகிறபோது, 'கிளாரிபிகேஷன்' கேட்க முடியாது, இந்த நேரத்திலே கேட்க முடியாது. உட்காருங்கள்.

(ஆ) விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு ''விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்திற்குப் பெயர் சூட்டுவது தொடர்பான பிரச்சினை பற்றி சட்டமன்றப் பேரவை விதி 110-இன் கீழ், பேரவையில் ஓர் அறிக்கையை வைப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அரசு பொறுப்பேற்றவுடன் பெரிய வருவாய் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து சீரான நிருவாக அமைப்பிற்கு வழி வகுத்து வருகிறது. அதன் அடிப்படையில், சென்ற இரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதேபோல், தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, தென் ஆற்காடு வள்ளலார் மாவட்டம் என்றும், விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, விழுப்புரம் மாவட்டம் என்றும் பெயர் வைப்பது என்று முடிவு செய்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், இந்தப் பேரவைக்கு, தனது மானியக் கோரிக்கை மீதான பதிலுரையில் தெரிவித்தார்கள்.

முற்பகல் 11-25

இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, விழுப்புரத்தினைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு வைக்க வேண்டிய பெயர் குறித்து, பல்வேறு இடங்களிலிருந்தும், பலதரப்பட்ட மக்களிடமிருந்தும், எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. குறிப்பாக, வன்னியர் சமுதாய இனத்தைச் சேர்ந்த, வன்னியர் சமுதாய மக்களின் வளர்ச்சிக்கு வழிகோலும் 18 சங்கங்கள் என்னிடம் ஒரு கோரிக்கை மனுவை வைத்தார்கள்.

1. தமிழ்நாடு வன்னியர் மன்றம்.

2. தமிழ்நாடு வன்னியர் பேரவை.

3. தமிழ்நாடு வன்னியர் சங்கம்.

4. தமிழ்நாடு வன்னியர் வளர்ச்சி சங்கம்.

5. வன்னியகுல க்ஷத்திரிய மகா சங்கம்.

6. வன்னியர் நல உரிமைச் சங்கம்.

7. ஜனநாயக வன்னியர் பேரவை-

8. தேசிய வன்னியர் பேரவை.

9. வன்னிய இளைஞர் பேரவை.

10. தமிழ்நாடு வன்னியர் மாணவ நலக் கழகம்.

11. சமுதாய மேம்பாட்டுக் கழகம்.

12. வன்னிய இளைஞர் இயக்கம்.

13. தமிழ்நாடு வன்னிய இளைஞர் மன்றம்.

14. வன்னியர் நலச் சங்கம்.

15. கிறித்துவ வன்னியர் அமைப்பு.

16. I.C.F. வன்னியர் பேரவை.

17. உழைப்பாளர் முன்னேற்றக் கட்சி.

மற்றும்

18. உழைப்பாளர் பொது நலக் கட்சி.

இந்த 18 வன்னியர்கள் மன்றங்களை உள்ளடக்கிய வன்னிய குல க்ஷத்திரிய நல அமைப்புகளின் மத்திய மையத்தின் தலைவர் திரு. இரா. குலசேகரன் அவர்கள் 13—4—1993 அன்று என்னைச் சந்தித்து கூட்டமைப்பின் தீர்மான நகலுடன் மனு வினைக் கொடுத்தார்கள். இச்சங்கங்கள் விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களின் திருநாமத்தைச் சூட்ட வேண்டும் என்று தீர்மானத்தை நிறைவேற்றி அதை என்னிடம் வேண்டுகோளாகவும் வைத்தார்கள். அதேபோல் நேற்று 14—4—1993 அன்று பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 14 சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் என்னைச் சந்தித்து ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்தார்கள். அவர்களும் திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களின் திருநாமத்தை விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குச் சூட்ட வேண்டும் என்ற தங்களின் விருப்பத்தினை மாவட்ட மக்களின் சார்பாக வைத்தார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1993 ஏப்ரல் 15] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களைப் பற்றி இந்த மாநிலத்தில் அரசியல் தெரிந்தவர்கள் அறியாமல் இருக்க வாய்ப்பில்லை. வன்னியர் சமுதாயப் பெருங்குடி மக்களிடையே மட்டுமின்றி தன்னுடைய களங்கமற்ற பொது வாழ்க்கையாலும் அரசியல் சாதுரியத் தன்மையாலும் பேச்சு வன்மையாலும் எல்லாத் தரப்பு மக்களும் தன்னை மதிக்கும் படி வாழ்ந்து தான் ஒரு சகாப்தம் என்பதை நிரூபித்துக் காட்டியவர் அவர். முதன் முதலாக கடலூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1952 முதல் 1962 வரை தமிழ்நாடு சட்டப் பேரவையில் சட்டப்பேரவை உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி, தமிழக அரசியலில் தன்னுடைய ஆழமான முத்திரையைப் பதித்தவர். 1954 முதல் 1957 வரை உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பணிபுரிந்து பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியவர். அது மட்டுமின்றி கடலூர் நகராட்சி மன்றத்தின் தலைவராகவும், உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவராகவும். பல்வேறு சமூகப் பொது நல நடவடிக்கைகளில் பங்கு கொண்டு நாட்டிற்காக உழைத்த நல்லவர் உத்தமர் திரு. எஸ். எஸ். இராமசாமி படையாச்சியார் ஆவார்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்''.

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க ஒரு மதிப்பு மிக்க உழவர் குடும்பத்தைச் சேர்ந்த அவர் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனில் மிகுந்த ஆர்வத்தையும் நாட்டத்தையும் காட்டி அவர்கள் சமுதாயத்தில் மதிப்புமிக்க அங்கத்தினைச் சேர்ந்தவர்களாக ஆக வேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் காட்டியவர்.

ஜாதி, சமயம் போன்றவற்றைக் கடந்து நாணயமான அரசியல் வாழ்க்கை நடத்திய நல்லவர்களை என்றென்றும் போற்றி வணங்குகின்ற பெருந்தன்மை உடையது எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். அந்த உணர்வின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உணர்வினை மதிக்கின்ற விதத்தில் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை நிர்மாணிப்பதில் இந்த அரசு காட்டுகின்ற ஆர்வத்தின் உந்துதலின் காரணமாக விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு ''விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்'' என்று பெயர் சூட்டப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-36

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களுக்கு முன்னால் எங்களுடைய கட்சி உறுப்பினர்களும், இது போன்று விழுப்புரம் மாவட்டத்திற்கு இராமசாமி படையாச்சி அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருந்தார்கள். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னாலே சிறப்பு கவன ஈர்ப்பாக அது எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றையதினம் எஸ்.எஸ்.ஆர். அவர்களுடைய பெயரை விழுப்புரம் மாவட்டத்திற்கு சூட்டியதற்காக என்னுடைய நன்றியறிதலை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமசாமி படையாச்சியினுடைய பெயரை வைக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு முதன் முதலாக கோரிக்கையை, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக எழுப்பியவனே நான்தான் என்ற பெருமையோடு, நானும் பெருமைப்பட்டுக்கொண்டு, இந்தப்புரட்சிகரமான இந்தப் பெயரைச் சூட்டியதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல் அமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

4. சிறப்புக் குறிப்பு.

சென்னையில் திருவல்லிக்கேணி இராயப்பேட்டை பகுதியில் காலரா நோய் தாக்கி இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த பிரச்சினை. சென்னை மாநகராட்சியில் திருவல்லிக்கேணி இராயப்பேட்டை, பகுதிகளில் காலரா நோய் தாக்கி இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி. தண்டாயுதபாணி, திரு. பெ. பொன்னுசாமி திரு. கே. ஏ. மனோகரன், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. தண்டாயுதபாணி, அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன் என்று சொன்னால் போதும்.